Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 170/2022 PW-4**

Name : கலைவாணன்
Father / Husband name : நடராஜன்
Village : வெட்டுக்காடு
Age : 51
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 03.06.2026

Accused absent. Petition u/s 317 BNSS filed and allowed. Defence counsel present. APP absent. Witness identified by Roshanai PS PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் திண்டிவனம் செஞ்சி ரோட்டிலுள்ள எண் - 11552 டாஸ்மாக்கடையில் விற்பனையாளராக வேலை செய்கிறேன். சாட்சி இளையச்சந்திரனை எனக்கு தெரியும், என்னுடன் பணிபுரிபவர். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 28.09.2021 அன்று மாலை சுமார் 06.00 - 07.00 மணியளவில் டீக்கடைக்கு சென்றுவிட்டு நான் வேலை செய்யும் டாஸ்மாக்கடைக்கு வந்தபோது ரோசணை காவல் நிலைய போலிசார் வந்து யாரோ பாட்டில் எடுத்து சென்றது சம்மந்தமாக விசாரித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள், என்னுடன் யார் கையொப்பம் செய்தார் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும்

விசாரணையின்போது கடந்த 03.09.2021 அன்று மதியம் 01.00 மணியளவில் நான் வேலையும் டாஸ்மாக்கடையில் 11552 கடையிலிருந்தபோது ரோசணை காவல் நிலைய போலிசார் குற்ற எண் 481/2021 வழக்கு சம்மந்தமாக விசாரித்து சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நீங்களும் இளையச்சந்திரன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையின் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக 28ம் தேதி கையொப்பம் செய்தபிறகு நான் வேறு கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.